

பதவியும் பண்பும்



மதுரை சிவானந்த
தபோவன வெளியீடு



❖ பிரார்த்தனை

எங்கும் நீக்கமற நிறைவாய் !
எல்லாம் வல்லவனாய், முற்றறிவினனாய்,
எல்லா உயிர்களிலும் பொலிந்து நிற்பவனாய்,
உள்ள சச்சிதாந்தப் பரம்பொருளே !
உமக்குச் சாஷ்டாங்க வணக்கம்.

கருணையும் அன்பும் நிறைந்த
முழுமுதற் பொருளே !
நன்கு அறியும் உள்ளமும், சமநோக்கும்
சமநிலை மனமும், நன்னம்பிக்கையும்,
பக்தியும் ஞானமும,
ஆசைகளை அடக்கி மனதை ஆண்டிட
ஆன்மீக பலமும் ஆற்றலும தந்து அருள்வாயாக !

வணங்கத் தகுந்த இறைவா !
ஆணவம், காமம், குரோதம்,பேராசை, துவேஷம்
எம்பால் வாராதொழியவும் எம் உள்ளத்தில்
நிரம்பிடவும் அருள் செய்வாயாக !

தனிப் பெருந்த தலைவா !
உலகில் காணும் நாமரூபங்கள் அனைத்திலும்
உம்மையே கண்டு உமக்கு நிலைத்த தொண்டாற்றிடவும்
உம்மையே கண்டு மறவாது சந்ததம் நினதுபுகழ் பாடிடவும்
எப்பொழுதும் நின்நாமம் எம் நாவில் ஒலித்திடவும்
என்றென்றும் உம்முளே நிலைபெற்று நிற்கவும்
திருவுளங்கொண்டருள்வாயே!

பதவியும் பண்பும்

ஆக்கியோர் :

ஸ்ரீ சுவாமி சிவானந்தர்



தமிழாக்கம் :

ஸ்ரீ சுவாமி விமலானந்தர்

சுவாமி விமலானந்தரின் மகாசமாதி நான்காமாண்டு நினைவஞ்சலி வெளியீடு

2005

✡

Published by:

சிவானந்த தபோவனம்

SIVANANDA TAPOVANAM

The Divine Life Society

Sivananda Nagar Post Office,
MADURAI - 625 008.
Off : 0452-2624265, 2622840

மூன்றாம் பதிப்பு
Copies 1000 - January 2005

சமர்ப்பணம்

பரிசுத்தமானவர்களால் போற்றப்படும் சீரிய பண்பே உண்மை. உண்மையைப் போற்றும் விவேகிகளின் உயர் பண்பாக நன்னடத்தை அமைகிறது. நேர்மை நற்பண்பை உருவாக்குகிறது என்பன போன்ற கருத்துக்களை ஜகத்குரு சுவாமி சிவானந்தர் **"பதவியும் பண்பும்"** என்ற இச்சிறு நூலில் விவரித்துள்ளார். அனைவரும் படித்துணர வேண்டியவை. சுவாமி விமலானந்தரின் நான்காமாண்டு மகாசமாதி நினைவஞ்சலியாக வெளியிடபெற்று குருதேவரின் பாதார விந்தங்களில் சமர்ப்பிக்கப்படுகிறது.

சிவானந்த நகர்
11.01.2005

- சிவானந்த தபோவனம்
மதுரை-8.

DONOR :



Sri O.P. SAWHNEYJI
M/S SUMMIT INDIA,
Okhla Industrial Area,
Phase - II, New Delhi - 110 020.

● Printed at HARIOM GRAPHICS, Madurai-1. Phone: 0452 - 5371002

6-1



Gurudev's Foreword

Power corrupts. Position corrupts. Wealth corrupts. Even intellectual brilliance and erudition corrupts, if they are not governed by right understanding, right action, and right motive.

First **Be good**. And then **Do good**

If you are not good in your heart of hearts, you cannot do good consistently, sincerely and with the right spirit or Bhav.

If you are not good at heart, you cannot handle power, position, wealth or your own intellectual powers correctly.

The world to-day is not suffering from want of talents, but from want of goodness. If all leaders, all the scientists, and all the businessmen, all over the world are good, then all the talents would prove to be blessings for mankind.

May god bless Sri Vanamamalai *(Swami Vimalananda) for his priceless gift of this booklet!

May God bless you!

Sivananda

❖ ஆசியுரை



மக்கள் பெற வேண்டிய பேறுகளுள் பண்பே தலையாயது. அதுவே அழகு மிகுந்தது. பரிசுத்தமானவர்களால் போற்றப்படுகிறது.

உண்மை, எல்லோரிடத்திலும் நேர்மையும் நன்மையும் கொண்டு நிற்பவர்கள், சத்தியத்தைப் போற்றுகின்றவர்கள், புனிதமான ஒழுக்கத்தைக் கொண்டவர்கள், நல்வழியே செல்பவர்கள், கொடையில் தாராளமும், தன்னலமின்மையும் பொருந்தப் பெற்ற வர்கள், துன்புற்றவர்களிடம் கருணை காட்டுகிறவர்கள், அறிவுச் செல்வத்தை உடையவர்கள், பக்தர்கள், சகல ஜீவராசிகளிடமும் இரக்கம் கொண்டவர்கள், இவர்களே நல்ல பண்புடையோர்.

அனைவரும் இத்தகைய நற்பண்புகளை கொண்டு விளங்க வேண்டும் என்று பல நூல்களை எழுதியும் அதன்படி வாழ்ந்தும் காண்பித்து கோடானு கோடி மக்களை தன் பக்கம் ஈர்த்த ஜகத்குரு ஸ்ரீ சுவாமி சிவானந்தரால் "பதவியும் பண்பும்" என்று எழுதப் பெற்ற இச்சிறுநூல் அன்னாரது பேரருளைப் பூரணமாகப் பெற்ற சுவாமி விமலானந்த மகராஜ் அழகு தமிழில் தமிழாக்கம் செய்து, டெல்லி தொழில் அதிபரும், குருதேவரிடத்தில் மிகுந்த பக்தி பூண்டவருமான ஸ்ரீ.ஓ.பி.சஹானிஜீ அவர்களின் நன்கொடையால் வெளியிடப் பெறுகிறது.

அன்னாரின் குடும்பத்தில் குருதேவரின் கருணை துணை புரிவதாகுக. தமிழக மக்கள் இந்நூலை படித்துப் பயன் பெறுவார் களாக. நன்கொடையாளருக்கு நலன்களும் வளங்களும் பெருகட்டும் என வாழ்த்தி நல்லாசிகளும் வழங்குகிறோம்.

ஜெய் சிவானந்தா.

சுவாமி சிவானந்தா (கையொப்பம்)

சிவானந்த நகர்,
மதுரை-8.

சுவாமி சிவானந்த சுந்தரானந்தா
தலைவர், சிவானந்த தபோவனம்,

6-1

1. எது பண்பு?

''எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு'' – குறள்.

மக்கள் பெற வேண்டிய பேறுகளுள் பண்பே தலையாயது. அதுவே அழகு மிகுந்தது. உண்மை உள்ளமும் பகைமை இன்மையும் எல்லாப் பிராணிகளுக்கும் மிகுந்த நன்மை பயப்பவையாகும்.

பரிசுத்தமானவர்களால் போற்றப்படும் சீரிய பண்பே உண்மை. உண்மையைப் போற்றும் விவேகிகளின் உயர்பண்பாக நன்னடத்தை அமைகிறது. நேர்மை நற்பண்பை உருவாக்குகிறது.

உள்ளடங்கிய தன்மைகளுக் கொப்ப ஒவ்வொரு மனிதனும் தத்தமக்குச் சொந்தமான கொள்கை களை வகுத்துக் கொள்கின்றனர். தன்னுடைய தகுதிக்கு ஏற்றவாறு இடைவிடாது உணவு அளித்தல், பொறை, நற்பண்புகளில் உறுதியான நம்பிக்கை, எல்லாக் காலத்திலும் எல்லாப் பிராணிகளிடத்திலும் அவசியமான

மரியாதை - இவ்வரிய பண்புகள் உலக இன்பங்கள் எல்லா வற்றையும் துறந்தவர்களிடம் தான் காணக் கிடைக் கின்றன. சகலவிதமான பண்புகளுடனும் பிரகாசிக்கும் மக்கள் இவ்வுலகில் காண்பது அருமை.

முன் நாட்களில் உயர்பண்புகளுடன் வாழ்ந்த ஒரு மனிதன் அறியாமை யினால் பாபம் செய்து விட்டால் அந்தப் பாபத்தைப் பிற்பாடு அவனே இல்லாததாக்க இயலும். தப்பிதமான முறையில் பாபம் செய்யப்பட்டு திருத்திக் கொள்ளப்பட்டதால் மக்களிடமுள்ள உயர் பண்பு மறுமுறையும் பிரகாசிக்கத் தொடங்குகிறது.

நல்லொழுக்க நன்னடத்தை அதியற்புதமானதும், புராதனமானதும், மாறாததும், நித்தியத் தன்மை உடையதுமாகும். நன்னடத்தை நல்லவர் களின் முக்கிய பண்பாக அமைகிறது.

உண்மையாகவே உயர்பண்புகளைக் கொண்டு நிற்பவர்களிடம் பெரியோர்களுக்குத் தொண்டு செய்தல், உண்மை உள்ளம், கோபமின்மை, முதலியன சதா நின்று நிலவுகின்றன. உங்கள் இதயத்தைப் பண்புமிகும் நன்னடத்தையை நோக்கிச் செலுத்தினால் பெரும் நன்மையை நீங்கள் பெற வழி பிறக்கும்.

உண்மையே வேதங்களின் சாரம். காம உணர்ச்சிகளின் மீதுள்ள ஆதிபத்தியமே உண்மையின் சாரம். உலகியல் இன்பங்களைத் துறத்தலே நன்னடத்தையின் சாரம். இவ்வரிய பண்புகள் அனைத்தும் நன்னடத்தையில் நிற்பவர்களிடம் சதா நின்று நிலவுகின்றன.

2. பண்புமிகும் மனிதன்

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு" - குறள்.

கோபம், கர்வம், பகைமை முதலியவற்றைக் காட்டாமல், எளிமையும், தூய்மையும் பொருந்தி நிற்பவனே பண்புமிகும் மனிதனாவான். வேதங்களில் கூறியதற்கொப்ப நிற்பதுடன் புனிதனாய், நேர்மையுடையவனாய், புனித ஒழுக்கத்தைக் கொண்டவனாய், பெரியோர்களுக்குத் தொண்டு செய்பவனாய், தன்னடக்கமுடையவனாய் வாழுகின்றவனே பண்புமிகும்

மனிதனாவான். பொறுத்தல், உண்மை உள்ளம், எளிமை, புனிதத் தன்மை, இவைகள் பண்புடைய நடத்தையின் தன்மைகள். சகல பிராணி களிடத்திலும் கருணை, பகையின்மை, பிறரைப் பழித்துக்கூறாமை, முதலிய வற்றைக் கொண்டு, நன்மை தின்மைகளின் பலனை அறிந்தவராய் விளங்கு கின்றவர்கள் பண்பு மிகுந்தவராகக் கருதப்படுகின்றனர்.

எல்லோரிடத்திலும் நேர்மையும் நன்மையும் கொண்டு நிற்பவர்கள், சத்தியத்தைப் போற்றுகின்றவர்கள், புனிதமான ஒழுக்கத்தைக் கொண்டவர்கள், நல்வழியே செல்பவர்கள், கொடையில் தாராளமும் தன்னலமின்மையும் பொருந்தப் பெற்றவர்கள், துன்புற்றவர்களிடம் கருணை காட்டுகிறவர்கள், அறிவுச் செல்வத்தை உடையவர்கள், பக்தர்கள் சகல ஜீவர்களிடம் இரக்கம் கொண்டவர்கள், இவர்களே பண்புடையோர்.

பண்புடைய மனிதன் தனது மனைவி, குழந்தைகள், தன்னை அண்டி நிற்பவர்களின் வசதிகளைக் கூடக் கவனியாமல் தர்மம் செய்து வருவான். புனிதமானவன் நன்னடத்தையைக் கொண்டு விளங்குகிறான். பெரியோர்களது செயல்களும் சுபாவங்களும் பெறுதற்கரியவை. தங்களது நற்செயல்களால் புனிதமானவர்களின் பாபங்கள் தானாகவே தொலைந்து போகின்றன.

தன்னைத் தான் புகழும் மூடன் இவ்வுலகில் புகழுடன் பிரகாசிக்க முடியாது. அழுக்குடனும், படாடோபமில்லாமலும் இருந்தாலும் கற்றவர் இவ்வுலகில் சிறந்து விளங்குகின்றனர். பண்புடையவன் மற்றவரை இகழமாட்டான்; தன்னைத்தான் புகழ்ந்து கொள்ளவும் மாட்டான்.

தியாகம், வெகுமதி, தவம், வேதமோதுதல், சத்தியம் முதலியன பண்புமிகும் மனிதனிடம் காணப்படுகின்றன. ஆசை, கோபம், பிடிவாதம், பேராசை, வஞ்சகத்தன்மை முதலியவற்றை அடக்கி, நல்லொழுக்கத்தைக் கொண்டவர்கள் பண்புமிகும் மக்களாவர்.

3.பண்புமிகும் வாழ்வின் பலன்கள்

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டு முலகு" - குறள்.

பண்புடையவன், எல்லா நேரங்களிலும் இரக்க சிந்தனையோடு நிற்பவன், கருணை நிறைந்தவன், உயரிய நிறைவைப் பெறுவதோடு பண்பெனும் ஆத்மீக வழியில் முன்னேறிச் செல்கிறான். இன்னா செய்யாமை, மன்னிக்கும் மாண்பு, சாந்தி, நிறைவு, பிறர் நோகாதபடி பேசும்

பேச்சு, உணர்ச்சிகள் மீது ஆட்சி, நல்லவர்களுக்குத் தொண்டு செய்தல், மறைநூல்களின் விதிப்படிச் செய்யப்படும் செயல்கள் இவை பொருந்தியதே உண்மையில் நிற்கும் ஞானிகளின் ஆத்மீகப் பாதை.

இடைவிடாது பண்புப் பாதையில் சென்று பண்புடையவர்களைத் தினமும் தொழு தேற்றுகின்றவர்களால் ஞானத்தின் நித்திய இருப்பிடத்திற்குச் சென்று சேர முடியும். அத்தகையவர்கள் தான் மறுபிறவியெனும் மாபெரும் அதிர்ச்சியிலிருந்து விடுபடுகின்றனர்.

பண்பு மிகும் வாழ்க்கையில் நிற்கும் ஞானிகள் நித்தியானந்தத்தையும் அமரபதவியையும் அடைகின்றனர். ஈகையை போற்றுகின்றவர்கள், இவ்வுலகில் செழிப்பையும் மறுஉலகில் இன்பத்தின் இருப்பிடத்தையும் பெறுகின்றனர்.

பண்பு மிகுந்தவர்கள், விரதங்களை அனுஷ்டிக்கின்றவர்கள், உண்மையே பேசுகின்றவர்கள், நன்னடத்தையில் நிற்பவர்கள், சத்குருவின் கட்டளைப் படி நடப்பவர்கள், மறைநூல்களில் கூறியுள்ள கூற்றுக்களுக்கொப்பச் செயலாற்றுகின்றவர்கள் மிக உயரிய ஞானத்தையும் அமரபதவியையும் அடைகின்றனர்.

4. பண்புடையவனின் சாதனை

''நகையுள்ளு மின்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு'' - குறள்.

ஒருத்தருக்கும் தீங்கிழைக்காதீர்கள். ஈதலை மேற்கொள்ளுங்கள். எப்பொழுதும் உண்மையே பேசுங்கள். ஆசையெனும் முதலையும், தூண்டுதலெனும் திமிங்கலமும் நிறைந்த கடலைச் சகிப்புத்தன்மை, நன் நடத்தையெனும் ஓடத்தினால் தாண்டிச் செல்லுங்கள். ஞானத்தில் சரண் அடைந்து, பண்புடையவர்களை வழிபடுங்கள்.

பொய்மையைத் தவிருங்கள். பிறர் வேண்டிச் கொள்ளாமலேயே எல்லோருக்கும் நன்மை செய்யுங்கள். காமவிகாரம், கோபம், பகைமை காரணமாக ஒரு பொழுதும் பண்பைக் கைவிடாதீர்கள். நல்லதிருஷ்டத்தில் அசாதாரண சந்தோஷத்தையோ அல்லது துரதிர்ஷ்டத்தில் நொந்து நலிந்து நிற்பதையோ கொள்வது கூடாது.

வறுமை வாட்டும் நேரத்தில் உணர்ச்சியற்றுப் போதலும், பண்புகளைப் புறக்கணித்தலும் செய்வது முறையல்ல. ஏதாவதொரு வேளையில் ஒரு தவறு செய்ய நேரிடின், அதே தவறை மறுமுறையும் செய்யாதீர்கள். மற்றவரின் இன்பத்தை உண்டு பண்ணும் செயல்களிலேயே நீங்கள் நின்று நிலவ வேண்டும். தவறை எதிர்த்துத் தவறு செய்தல் தவறாகும். மற்றவர்களுடன் உண்மை உள்ளத்தோடு பழகுங்கள்.

5. ஈகையெனும் இனிய பண்பு

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி" - குறள்.

பேராசிரியர் இராமகிருஷ்ணன் ஒரு ஏழைக்குக் கம்பளம் ஒன்றை ஈந்தார். "நான் அவனுக்கு அதைக் கொடுத்திருக்கக் கூடாது", என்று அவர் பின்னால் எண்ணினார். அவர் இதயத்தில் கொந்தளிப்பும் துன்பமும் பொங்கி எழுந்தன. அந்த ஏழையிடமிருந்து கம்பளத்தைத் திரும்பப் பெறுவதென முடிவு செய்தார்.

பேராசிரியர் என்றால் இந்தவித ஈகையால் உங்களுக்கு நன்மையே ஏற்பட முடியாது. உலகியல் மனமுள்ள பலரும் இந்த முறையிலமையும் ஈகையைத் தான் மேற்கொள்கின்றனர். இத்தகைய கொடை வள்ளல்களைக் கொண்டு நிறைந்தள்ளது இவ்வுலகம்.

கஞ்சத்தனம் மாபெரும் சாபத்தீட்டாகும். அது ஒற்றுமையின் எதிரியும், சுயநலத்தின் நண்பனுமாகும். கஞ்சர்கள் ஆத்மீகப் பாதைக்குச் சிறிதும் தகுதி யற்றவர்கள். தாராள மனப்பான்மை கொண்டவர் மிகச் சுருக்கம். பதவி, பெருமை, சாந்தி, சந்தோஷத்தைப் பலரும் தாரள இதயத்தின் மூலமாகவே பெற்றுள்ளனர்.

கஞ்சர்கள் கனவிலும் இவற்றைப் பெற முடியாது; வாழ்க்கையிலும் வெற்றிபெற முடியாது. அவர்களது தொடர்பு கூட ஆத்மீக வழி மனமுடையவர்களுக்கு மிகவும் அபாயகரமானதாகும். தங்களிடமுள்ள கெட்டதும், சுருங்கினதுமான இதயத்தின் காரணமாக அவர்கள் தங்கள் சுற்று வட்டாரத்தையும், ஏன், வாயுமண்டலத்தையுமே விஷமாக்குகின்றனர். ஈகையானது தொடர்ந்தும் தடையில்லாமலும் அமைய வேண்டும்.

கொடுப்பது சுபாவமாகி விட வேண்டும். கொடுப்பதில் நீங்கள் மிகுந்த சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டும். "நான் ஒரு பெரும் தர்ம காரியத்தைச் செய்திருக்கிறேன். சொர்க்கத்தில் நான் சௌகரியமாக இருப்பேன். அடுத்த ஜன்மத்தில் நான் பணக்காரனாகப் பிறப்பேன். இந்தத் தர்ம காரியம் எனது பாபங்களைத் துடைத்துவிடும். எனது பட்டணத்திலோ, ஜில்லாவிலோ என்னைப் போன்ற தர்மவான் கிடையாது. நான் ஒரு சிறந்த தர்மவான் என்பதாகவே மக்கள் என்னை அறிவார்" என்றெல்லாம் நீங்கள் நினைக்கக்கூடாது. இப்படி நினைப்பது அற்பத்தனமாகும். கண்டிக்கத்தக்கதாகும்.

உங்கள் இதயம் பரந்ததாக இருக்க வேண்டும். ஏழை மக்களிடம் கற்களைப் போன்று நீங்கள் ரூபாய்களை அள்ளி வீச வேண்டும். அப்பொழுது தான் உங்களிடம் அத்துவித உணர்வும், சமாதியும் பேரன்பும் வளரும். இந்தக் காலத்தில் பெரும்பான்மை இல்லறத்தாரும் தன்னலம் மிகுந்தவர்களாக இருக்கின்றனர். அவர்களின் இரத்தமே பணம்.

அவர்கள் முகத்தில் சந்தோஷமின்மையும், அசட்டுத்தனமும் தாண்டவமாடுவதை நீங்கள் காணலாம். கவலை, பேராசை, காம விகாரம், பொறாமை, சோர்வு இன்னும் எல்லா தீய குணங்களும் கஞ்சர்களைப் பற்றி நின்று அவர்களின் இதயத்தையே அரித்து விடுகின்றன. நீதிபதிகளும் ஜமீன்தார்களும் கூடப் போர்ட்டர்களுடன் ரெயில்வே பிளாட்பாரத்தில் ஒரணாவுக்காகச் சண்டை போடுவதைக் காண வருந்த வேண்டியிருக்கிறது.

கஞ்சனிடம் ரூ.50,000/- இருந்தாலும் அவன் அதை அனுபவிக்க மாட்டான். ஆனால் ஒரு லட்சத்திற்கு ஆசைப்படுவான். லட்சாதிபதி கோடீசுவரனாக வேட்கை கொள்வான். தங்களின் சொந்த நண்பர்களுடன் தங்களிடமுள்ள விலைஉயர்ந்த தின்பண்டங்களைப் பகுத்துப் புசிக்க விரும்பாத கடும் சித்தமும் கஞ்சத்தனமும் பொருந்திய பணக்காரர்களைப் பார்ப்பது பயங்கரமாக இருக்கிறது.

அழகிய தின்பண்டங்களை அலமாரிக்குள் பூட்டிவைத்திருக்கும் பணக்காரர்கள் மற்றவர்கள் படுக்கைச் சென்ற பின்னர் இரவில் ஒருவருக்கும் தெரியாமல் அவற்றைத் தின்னத் தொடங்குவர். இத்தகையவர்கள் ஒரு பைசா கூட தர்மம் செய்யமாட்டார்கள். தாங்கள் நல்ல உணவுவகைகளை உட்கொள்ளுவர். ஆனால் மூன்று நாட்கள் தொடர்ந்து பட்டினி கிடக்கும் ஒரு ஏழை மனிதனுக்குச் சிறிதளவு உணவு கூட அவர்கள் கொடுத்துதவ முன் வரமாட்டார்கள். அவர்களின் கடும் இதயம் அந்த வகையில் அமைந்து உள்ளது. சுத்தமான நல்ல பசுவின் பாலைத் தாங்கள் அருந்திவிட்டுத் தங்கள்

வேலையாட்களுக்குத் தண்ணீர் கலந்த பாலையே அவர்கள் கொடுக்க முற்படுவர்; தாங்கள் அப்பொழுது செய்த அதிருசியான உணவு வகைகளை உண்டுவிட்டு மூன்றுநாள் மூலையிலேயே வைக்கப்பட்டுக் கிடக்கும் உபயோகமற்ற தாயாரிப்புகளை வேலைக்காரர்களுக்குக் கொடுக்க துணிவர்.

பழைய உணவுவகைகளை உபயோகப்படுத்துவதற்கான வாய்ப்பை பெற மூன்று நாட்கள் காத்திருந்து, பின்னர் வருத்தமான உள்ளத்துடன் தங்கள் பணியாட்களுக்கு அவற்றை விட்டெறிபவரும் உண்டு. அந்தக் கெட்டுப்போன பொருள்களையும் விட்டுவிட அவர்கள் விரும்பவில்லை. அநேகமாக எல்லாப் பணக்கார வீடுகளிலும், இத்தகைய உள்ளமுருக்கும் உயர்காட்சிகள் அனைவரும் காணலாம்.

சில உத்தியோகஸ்தர்கள் வேலையிலிருந்து ஒய்வு பெற்று, கங்கை, நர்மதை, யமுனை முதலிய நதிகளின் கரையில் வாழ்கின்றனர். அவர்கள் சிறிது ஜபமும் தியானமும், சிறிது யோகவாசிஷ்ட, உபநிடத பாராயணமும் செய்துவிட்டுத் தங்களை ஜீவன்முக்தர்களாகவே கருதுகின்றனர்.

தங்கள் குழந்தைகளிடம் தீராத பற்றுதல் கொண்ட அவர்கள் தங்கள் பென்ஷன் பணத்தைக்கூடத் தங்கள் மக்கள், பேரன் பேத்திகள் முதலியோருக்கு அனுப்பி விடுகின்றனர். ஒரு பைசா கூட அவர்கள் தர்மம் செய்ய முன்வரமாட்டார்கள். கஞ்சத்தனத்தின் அவதாரமே அவர்கள். அவர்களெல்லாம் நம்பிக்கையற்ற ஆத்மாக்கள். ஆயிரம் பிறவி எடுத்த பின்னரும் கஞ்சனுக்குக் கனவிலும் மோட்சம் கிடைப்பது அரிது.

ஊசி முனையில் ஒட்டகம் நுழைந்தாலும் நுழையக்கூடும். ஆனால் பணக்காரனுக்குப் பரமண்டலத்தில் நுழையும் வாய்ப்புக் கிடைப்பது அரிது என்று திட்டவட்டமாக்த் தெரிவிக்கிறார் ஏசுநாதர். சிலர் தர்மம் செய்கின்றனர். மேலும் புகைப்படத்துடன் தங்கள் பெயர்கள் பத்திரிகை களில் வெளியிடப்படுவதைப் பார்க்கத் துடிதுடித்து நிற்கின்றனர். இது தர்மத்தின் ஒரு தாமசத் தோற்றமாகும். இது தர்மமே அல்ல.

வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரிய கூடாது என்கிறார் ஏசுநாதர். நீங்கள் செய்யும் தர்மத்தைப் பற்றி விளம்பரப்படுத்தக் கூடாது. உங்களது தர்மசிந்தனையைப் பாராட்டும் பொழுது இதயத்தில் ஒருவித உயிர்ப்பு ஏற்பட வேண்டும்.

கஞ்சத்தனத்தை ஒருவன் இல்லாதாக்கினால் சாதனையின் பெரும் பகுதி தீர்ந்து போயிற்று எனலாம். அவன் உறுதியான ஒன்றைப் பெற்றுவிட்டான். "ஈகையால் பாபங்கள் தொலைந்து போகும். ஈகை எண்ணற்ற பாபங்களை

மறைக்கிறது'' என்கிறார் ஏசுநாதர். ''யஜ்ஞதான தபஸ் சைவ பாவனானி மனீஷினாம்'' என்று கீதையில் நீங்கள் காண்பீர்கள். ''யக்ஞம், ஈகை, தவம் மூன்றுமே புத்தியைப் பரிசுத்தமாக்குபவை''.

அன்றாடம் தர்மச் செய்கைகளில் ஈடுபட நீங்கள் துடித்து நிற்க வேண்டும். எந்த ஒரு வாய்ப்பையும் விட்டுவிடுதல் கூடாது. தொடர்ந்த சாத்துவீக தானத்தைவிடச் சிறந்த யஜ்ஞம் வேறு கிடையாது. கர்ணனும் ராஜா போஜனும் எண்ணற்ற தானதர்மங்களைச் செய்துள்ளனர். எனவே அவர்கள் இன்றும் நம் இதயத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வரிய உதார விருத்தியை வளருங்கள், நீங்கள் அரசர்க்கரசராக விளங்க முடியும்.

நீங்கள் கொடுத்தால், உலகச் செல்வமனைத்தும் உங்களுடையதாகும். பொருள் வந்து குவியும். இதுவே இயற்கையின் அபூர்வ நியதி. எனவே, கொடுங்கள்! கொடுங்கள்!! எங்கும் கடவுளைக் காணுங்கள். எல்லோருடனும் பகிர்ந்துப் புசியுங்கள். உங்களிடம் உள்ளதில் அதிகமான நல்ல பங்கைப் பிறர்க்குக் கொடுத்து புசியுங்கள். உங்களிடம் உள்ளதில் அதிகமான நல்ல பங்கைப் பிறர்க்குத் கொடுத்து விடுங்கள்.

வேர் பிடித்திருக்கும் கஞ்சதனத்தை விரட்டியடிங்கள். உங்கள் இதயம் விரிவடையும். உங்களிடம் வாழ்க்கையைக் குறித்த விரிந்த நோக்கு அமைந்து நிற்கும். உங்களிடம் புதியதோர் பரந்த நோக்கும் அமையும். அந்தரங்க வாசியின் உயரிய உதவியை நீங்கள் உணர்வீர்கள். சொல்லொணா தெய்வீக ஆனந்தத்தை நீங்கள் அனுபவிப்பீர்கள். இது உங்களுக்கு அபார உள்வலிமை தரும். ஆத்மீகப் பாதையில் நீங்கள் உறுதிபூண்டு நிற்பீர்கள். நீங்கள் நவீனகால புத்தராக விளங்குவீர்கள்.

ஏழை, பிணியாளர் மற்றும் திக்கற்றவர்களுக்குக் கொடுங்கள். அனாதைகள், தளர்ந்தவர்கள், குருடர்கள், உதவியற்ற விதவைகளுக்குக் கொடுங்கள். சாது, சன்யாசிகள், சமய சமூகவழிச் செயலாற்றும் ஸ்தாபனங் களுக்குக் கொடுங்கள். ஈகையானது மரியாதை, பணிவு, சந்தோஷத்துடன் அமைய வேண்டும்.

மற்றவர்களுக்குச் சேவை செய்வதற்கானதோர் வாய்ப்புக் கிடைத்ததில் நீங்கள் பெருமிதம் கொள்ள வேண்டும். பிறர்க்குக் கொடுக்கும்போது நீங்களே பெற்றுக் கொள்வதாகக் கருத வேண்டும். ஈகையால் உதவி செய்வதற்கு வாய்ப்பளிக்கும் மனிதனுக்கு நன்றி செலுத்துங்கள். நேரிய மனப்போக்குடன் ஈந்து, தான்தர்மச் செய்கைகளால் கடவுளை அடையுங்கள். நல்லுணர்ச்சியுடன் ஈகையைப் போற்றும் உத்தமர்கள் வாழ்க.

6. நலம் பயக்கும் நட்பு

"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு - குறள்

வேண்டி நிற்கும் நேரத்தில் உதவுகின்றவனே உண்மை நண்பன். அவனே மிகச் சிறந்த நன்மை செய்வோன். நட்பை முறிக்கக் கூடாது. வாழ்க்கை முழுதும் நட்பைப் போற்றி வளர்க்க வேண்டும். முறிந்த நட்பைச் செப்பனிட்டுச் சீரமைப்பது முடியாத காரியமாகும்.

நித்தியத் தன்மை பொருந்திய ஒரே உண்மை நண்பன் உங்கள் அந்தரங்கவாசியான கடவுளேயாவார். அவரை வழிபடுங்கள். அன்றாடம் அவரையே தியானித்து நில்லுங்கள். மற்றெல்லா நண்பர்களும் உங்களை விட்டகன்று விடினும், இவ்வரிய நித்திய நண்பன் உங்களை விட்டு அகலவே மாட்டார்.

இந்த உலகில் உண்மை நண்பனைப் பார்ப்பது கஷ்டம். மக்கள் சுயநல முயற்சிகளில் ஒன்று சேருகின்றனர். மற்றவரிடமிருந்து தான் எண்ணியதைப் பெறவில்லை என்றால் நட்பு முறிந்து விடுகிறது. நட்புக்கு விரோதமாகச் செல்கின்றனர் கீழ் மக்களேயாவர்.

அவர்கள் கடையரிலும் கடையவராவர். என்றும் நின்று நிலவும் நட்பை வளருங்கள். சுயநலத்தைக் கைவிடுங்கள். பொருந்தி நில்லுங்கள். சேவை செய்யுங்கள். ஒன்றையும் எதிர்பாராதீர்கள். அப்பொழுது தான் உண்மை நட்பு உங்களிடம் பொருந்தி நிற்கும்.

7. இனிய பேச்சு

"முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்" - குறள்

பேராதரவு முதலியவற்றை ஆக்கும் பண்பு தான் இனிய பேச்சு. இவ்வரிய பண்பைக் கொண்டவன் எல்லோராலும் பாராட்டப்படுகிறான். புகழப் படுகிறான். ஒன்றும் பேசாதவன், எரிச்சலைத் தெரிவிக்கும் முகபாவத்தைக்

கண்டவன் எல்லோராலும் வெறுக்கப்படுகிறான். இனிய பேச்சின் இன்மையே அவனை அவ்வண்ணம் ஆக்குகிறது.

மற்றவர்களைக் கண்டதும் புன்முறுவலுடன் முதல் முதலாக இனிய பேச்சில் ஈடுபடுகிறவன் எல்லோரையும் வெற்றி கொள்வதில் ஜயமடைகிறான். அவன் உலகின் அன்பைப் பெறுகிறான். உயரிய வெகுமதியாயினும் இனிய பேச்சுடன் கொடுக்காவிட்டால் மக்களுக்குப் பிடிக்காது. அது கறியில்லாத சாதத்தை ஒக்கும்.

தண்டனை கொடுக்க எண்ணும் அரசனும் இனிய சொற்களை உபயோகிக்க வேண்டும். இனிய பேச்சு ஒருவனின் நோக்கத்தை நிறைவேற்றி வைப்பதுடன், மற்றவரின் இதயங்களைப் புண்படுத்துவதும் இல்லை.

''அகனமர்ந்து ஈதலின் நன்றே, முகமலர்ந்து இன்சொலனாகப் பெறின்''. நற்செய்கை, நற்பேச்சு, இனிய பேச்சு, இவை பொருந்தியவனுக்கு நிகராக யாருமே கிடையாது.

8. கொல்லாமையின் வலு

''அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்'' - குறள்

கொல்லாமையே உயரிய அன்பு. அதுவே ஆத்மீக சக்தி. அதுவே தெய்வீக வாழ்க்கை. அன்பின் முன் வெறுப்பு வெருண்டோடி விடுகிறது. அஹிம்சையின் முன் வெறுப்பு உருகி விடுகிறது. அஹிம்சையை விடப் பெரிய சக்தி கிடையாது. அஹிம்சையைப் போற்றுவதால் பெருமளவுக்கு இச்சாசக்தி வளர்கிறது. அஹிம்சையைக் கொள்வதால் நீங்கள் பயமற்றவர்களாகி விடுவீர்கள்.

சிரத்தையுடன் கொல்லாமையை மேற்கொண்டு ஒழுகுகின்றவனால் உலகையே உருட்ட முடியும். அவனால் வன விலங்குகளை அடக்க முடியும். மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள முடியும். பகைவர்களை எதிர்த்து முறியடிக்க முடியும். ஆக்குவதும் அழிப்பதும் அவனால் இயலும். அஹிம்சையின் அபார சக்தி அளவிடற்கரியது. அதன் பெருமை கூறும் தரமன்று. அஹிம்சையின் சக்தி மின்சாரம் அல்லது காந்த சக்தியை விட மிக அற்புதமாக அமைந்திருக்கிறது.

9. வாய்மையே வெற்றி பெறும்

"மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய்வாரின் தலை" - குறள்

உண்மையே உயர்வுறும்; பொய்மையல்ல! உண்மையே வெற்றி பெறும். தர்மம் உண்மையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. உண்மையின் உயரிய இருப்பிடத்தையே முனிவர்கள் அடைகின்றனர். மற்றதைக் குறித்தும் அவர்கள் பேசுவதோ, எண்ணுவதோ கிடையாது.

வாய்மை என்பது தனிப்பட்டோர் சொத்தல்ல; தனிப்பட்ட இனத்தையோ, மதத்தையோ, சமூகத்தையோ சேர்ந்ததல்ல. அது எல்லோருடைய பொதுச் சொத்து, சகலருக்கும் சமமானது.

உண்மை வித்து, பிரம்மச்சரியம் வேர், தியானம் மழை, சாந்தியே மலர், மோட்சம் தான் பழம். எனவே உண்மை பேசுங்கள். பிரம்மச்சரியத்தை அனுஷ்டியுங்கள்; தியானத்தை அப்யசியுங்கள், சாந்தியை வளருங்கள், நீங்கள் பிறவிக் கடலைத் தாண்டி நித்தியானந்தம், உயரிய சாந்தி, வற்றாத இன்பம், அமர பதவியை அடைவது உறுதி.

வாய்மையெனும் உண்மை வழியை நேர்மையுடன் பின்பற்றுங்கள். விரைவிலேயே நீங்கள் உங்கள் லட்சியத்தை அடைவது உறுதி.

10. பணிவுடைமையெனும் பண்பு

"பணிவுடையவன் இன்சொலனாதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற" - குறள்

பணிவுடமையே நித்திய வாழ்வுக்கான பாதை. எளிய வாழ்வே நித்தியானந்த சாம்ராஜ்யத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும் ராஜபாதை. வீணத்தனமும், ஆடம்பரங்களும் நம்மை பிறப்பிறப்பில் சிக்க வைக்கும். ஆணவத்தின் கோட்டையைத் தகர்த்தெறியும் ஆற்றல் வாய்ந்த அணுகுண்டு தான் பணிவுடைமை. ஆணவம் உருக்கைவிட வலு வாய்ந்தது.

ஆயிரம் குண்டுகளால் ஒரு பெரும் பட்டணத்தைப் பாழ்படுத்த முடியும். ஆனால், இவ்வாயிரம் குண்டுகளைக் காட்டிலும் பன்மடங்கு வலிமை வாய்ந்த பணிவெனும் பெரும் குண்டினால் ஆணவத்தையே தகர்த்தெறிந்து விட முடியும். பணிவுடையவனால் மூவுலகத்தையும் அடக்கி ஆள முடியும். அனைவருடையவும் உள்ளத்தை அவனால் கொள்ளை கொள்ள இயலும்.

ஆசிரியர் முன் பணிவுடனிருங்கள். எல்லா ஜீவர்களிடமும் இரக்கம் காட்டுங்கள். பயத்தை அகற்றி நிறுத்துங்கள். ஆணவத்தை இல்லாதாக்குங்கள். வெறும் புறப்பணிவு பயனற்றது. அது ஏமாற்றமாகும்.

உங்களுக்கு முன் ஒரு டஜன் நமஸ்காரங்கள் செய்துவிட்டு உங்கள் பின்னே சென்று தூற்றும் நிலையை என்னென்று உரைப்பது? வேண்டுவது வேஷமில்லாத உண்மைப் பணிவேயாகும். உண்மையான பணிவு உறுதியான ஆத்மீக முன்னேற்றத்தின் விளைவேயாகும்.

11. நிறைவெனும் நிகரிலாச் செல்வம்

"அவ்வித்து அழுக்காறுடையவனைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்" - குறள்

நிறைவுதான் உண்மைச் செல்வம். மனச் சாந்தியைத் தருவதால் நிறைவே இயற்கைச் செல்வம். நிறைவுடன் நட்பு வைத்துக் கொண்டால் அது உங்களைச் சத்சங்கம், ஆத்ம விசாரம், சாந்தி முதலிய உயர் பண்புகளிடம் அழைத்துச் செல்லும்.

நீங்கள் மாதம் நூறு ரூபாய் சம்பாதிக்கிறீர்கள் என்றால், மாதம் ஆயிரம் பெறுகின்றவனோடு உங்களை ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள். அங்ஙனம் ஒப்பிட்டால் நிறைவின்மை தோன்றி நிற்கும். இது உங்கள் மனச் சாந்தியைக் கெடுத்துவிடும்.

மாதம் ரூபாய் இருபந்தைந்து பெறுகின்றவனுடன் உங்களை ஒப்பிட்டுப் பார்த்து, அவனை விட உங்களை நல்ல நிலையில் வைத்திருப்பதற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள். உங்களுடைய ஒய்வற்ற மனதைச் சாந்தப்படுத்த நிறைவொன்றினாலேயே முடியும். நிறைவைக் காட்டிலும் உயர் செல்வம் வேறு இருக்க முடியாது.

உலகியல் ஆசைகளை உதறித்தள்ளி, உயரியவற்றை பெறப்பாடுபடுங்கள். பேராசை மிகுந்தவர்களிடம் சாந்தி ஏற்பட வழி கிடையாது. தூய இதயத்தில் தான் நிறைவு நின்று நிலவுகிறது. காமவெறியும், தன்னலமும் மிகுந்த வரை விட்டு அது காதவழி ஓடிச் செல்கிறது.

பகைமை, பேராசை, தன்னலம், பொறாமை முதலியவைகளைக் களைவதன் மூலம் உங்கள் இதயமாகிய தோட்டத்தில் சாந்தியை வளருங்கள். அப்பொழுதுதான் உங்களிடம் வருகின்றவர்கள் சாந்தியையும் சமாதானத்தையும் அடைவர்.

12. அன்பெனும் அரிய பண்பு

"அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" - குறள்

பெற்றோர்களைக் கடவுள் போல் நேசியுங்கள். எல்லோரிடத்திலும் அன்பை வளர்த்தால் மனித சமுதாயத்தையே நீங்கள் தன்னமின்றி நேசிக்க முடியும். மனித சமுதாயத்தின் மீதுள்ள அன்பு முதலில் வீட்டிலேயே தொடங்குகிறது.

முதலில் பெற்றோர்கள், சகோதர சகோதரிகள், உறவினர், அயலார், பள்ளித் தோழர்கள், சமூகம், நாடு இம்முறையே அகில உலகத்தையும் நேசியுங்கள். இங்ஙனம் குழந்தையின் மனதில் விதைக்கப்பட்ட அன்பின் வித்து படிப்படியே பேரின்பமாகப் பரிணமிக்கிறது.

மக்களின் உள்ளங்களைத் தூய அன்பினால் வெற்றி கொள்ளுங்கள். உண்மையில் நின்று, யோகப்பாதையில் வெற்றிகரமாக முன்னேறிச் செல்லுங்கள். ஆணவத்தை அகற்றி, எல்லையில்லா சாம்ராஜ்யத்தினுள் புகுங்கள். அறியாமையை இல்லாதாக்கி, ஆத்ம ஞானத்தைப் பெறுங்கள்.

அன்பே சமாதானம்; அது வாழ்வை நீட்டிக்கிறது. பயம், பொறாமை, வெறுப்பு முதலியன வாழ்வைச் சுருக்குகிறது. வாழ்க்கை மூட்டையை லேசாக்கி, ஆத்மத் தியாகத்தைச் சந்தோஷத்துடன் செய்ய அன்பு வழி கோலுகிறது. அன்பே சர்வரோக நிவாரணியாகும். பணிவு, இனிய பேச்சு, முதலியவற்றைக் கொண்டால் உங்களால் யாவரையும் வெற்றி கொள்ள முடியும்.

தொடர்ந்த காருண்யச் செயல்களால் தான் அமரத்வத்தை அடைய முடியும். வெறுப்பு, கோபம், பொறாமை, முதலியன அன்புமிகும் உள்ளத்துடன் செய்யப்படும் தொடர்ந்த சேவையால் அகற்றப்படுகின்றன.

இன்றும் பகவான் புத்தர் நமது உள்ளங்களில் வாழ்ந்து வருகிறார். ஏன்? அவர் அபார கருணையுடன் அபூர்வ சேவை செய்தார். மேலும் இரக்கமே உருவாக அமைந்து நின்றார். நீங்கள் அன்புச் செய்கைகளை மேற்கொண்டு ஒழுகினால் உங்களை உலகமே நேசிக்கும்.

13. தன்னலமின்மை

"அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" - குறள்

தன்னலமே தீயகுணங்களின் உறைவிடம். அது அறியாமையின் விளைவு. தன்னலம் மிகுந்தவன் பேராசையும் நேர்மையின்மையும் கொண்டவனாகவும் இருக்கிறான். அவன் கடவுளுக்கு அப்பாற்பட்டவனாகிறான். தனது நோக்கத்தை நிறைவேற்ற அவன் எதையும் செய்யத் துணிவான்.

மற்றவர்களைத் துன்புறுத்தி, பொருள்களை அபகரித்து நிற்பது மன்னியில் தனது சுயநலத்தைக் காப்பாற்ற அவன் பற்பல பாபச் செயல்களைச் செய்கிறான். அவனிடம் கொள்கைகளும் நல்லொழுக்கமும் நின்று நிலவாது. அவனிடம் மனச் சாந்தியே கிடையாது. செல்வம், பெருமை, போர்-புகழ் முதலியவற்றைப் பெறச் சதா திட்டமிட்டவனாகவே அவன் இருப்பான்.

மற்றவர்களிலிருந்து அவன் சதா பிரிந்தே நிற்பான். அவன் தனது மனைவி, குழந்தைகள், சொத்துக்களில் அதிகமான பற்றுக்கொண்டு விளங்குவான். சுயநலம் யோகத்திற்கு மாபெரும் இடையூறாக அமைகிறது. எனவே சுயநலத்தைத் தன்னலமற்ற சேவை, ஈகை சத்சங்கத்தினால் இல்லா தாக்குங்கள். சுயநலம் பொருந்தியவனால் பேரன்பை வளர்க்க முடியாது; அனைவரையும் தனது சொந்தம் போல் பாவிக்க முடியாது; உலகசகோதர தத்துவத்தை ஆக்க முடியாது. தன் குழந்தைகளிடமுள்ள அன்பை மற்ற

குழந்தைகளிடமும் காட்ட முடியாது; எல்லாக் குழந்தைகளையும் தன் குழந்தைகளாகக் கருத முடியாது. சுயநலமியின் இதயம் சுருங்கி இருக்கும்.

ஒரு சிலரிடம் தான் அவனது அன்பு நின்று நிலவும். ஆனால் தன்னல மின்மையைக் கொண்டு பேரன்பை வளர்த்தவன் அனைவரையும், ஒன்று போல் பார்க்கிறான். உலகமனைத்தும், அவன் குடும்பம், அவன் பிறருக்காக வாழ்கிறான். பரந்த இதயத்தைக் கொண்ட அவனே உலகின் கண்கண்ட கடவுள்.

14. நல்லொழுக்கம்

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி" - குறள்

நல்லொழுக்கமே உயரிய சக்தி. ஒழுக்கமின்மை நடைமுறை மரணமாகும். நல்லொழுக்கம் நற்செயல்களாலாகியது. நல்லொழுக்கம் இச்சாசக்தியை ஏற்படுத்துகிறது. நற்பண்புடையவனின் அணிகலனே நல்லொழுக்கம். ஒரு பெண்ணின் அணியும் அரனும் நல்லொழுக்கமேயாகும்.

உங்கள் நல்லொழுக்கமும், உங்கள் வருங்காலமும் உங்களுடைய எண்ணங்கள், செயல்களால், ஆக்கப்படுகின்றன. எண்ணியர் எண்ணியாங் கெய்துவர். உயர்ந்த சிந்தை உடையவன், உயரிய ஒழுக்கத்துடன் பிறக்கிறான். தாழ்ந்த எண்ணங் கொண்டவன் இழிந்த ஒழுக்கத்துடன் பிறக்கிறான்.

இதுவே இயற்கையின் அழியா நியதி. இந்த நிமிடத்திலிருந்தே உங்கள் எண்ணத்தின் தரத்தையும் மனப்போக்கையும் மாற்றி அமையுங்கள். நற் சிந்தனையை மேற்கொள்ளுங்கள். சாத்துவீக ஆசையைக் கொண்டு நில்லுங்கள். மாற்றப்பட்ட எண்ணங்கள் உங்கள் வாழ்வையே மாற்றி அமைக்கும்.

நற்செயல்களைச் செய்யுங்கள். தூய, தெய்வீக எண்ணங்களைக் கொண்டு ஒழுக்கத்தை வளருங்கள். பகைமையுணர்ச்சியை இல்லாதாக்கி, அன்பையும் சகானுபூதியையும் எங்கும் பரப்புங்கள். தூய அன்பினால் தான் பகைமையை வெல்ல முடியும். தன்னலமற்ற தூய அன்புதான் அண்டத்தை ஒற்றுமைப் படுத்தும் உயர்சக்தியாகும்.

பெற்றோர்களே குழந்தைகளின் ஒழுக்கத்திற்குப் பொறுப்பு வாய்ந்தவர். பெற்றோர்கள் நாத்திகர்களானால், குழந்தைகளும் நாத்திகர்களாகிவிடுவர். குழந்தைகளுக்குச் சமயப்பயிற்சி அளிப்பது பெற்றோரின் கடமையாகும்.

அவர்கள் தெய்வீக வாழ்க்கையில் நின்று வாழ வேண்டும். குழந்தைப் பருவத்திலேயே சமய சம்ஸ்காரங்கள் வேரூன்றி விட்டால், அவர்கள் பெரியவர்களாகும் நேரத்தில் அவ்வெண்ணங்கள் பூத்துக் காய்க்கத் தொடங்குவது உறுதி.

பண்பே உயரிய மதம், பண்பு சாந்தியை ஏற்படுத்துகிறது. உயிரையும் செல்வத்தையும் விட பெரிது பண்பு. ஆனந்தத்திற்கான வாசலே பண்பு எனவே பண்புமிகும் வாழ்க்கையில் வாழுங்கள்.

அபாயங்களையும், கஷ்டங்களையும் உறுதியுடன் எதிர்த்து நிற்கும் தன்மையை அளிப்பது மனதின் தைரியமெனும் பண்பேயாகும். உலகியல், ஆத்மீக முன்னேற்றத்துக்குத் தைரியம் இன்றியமையாததாக வேண்டப் படுகிறது. மூடன் உண்மை மரணத்திற்கு முன் பல தடவைகள் மரிக்கிறான்.

உண்மையும் நேர்மையும் தைரியத்துடன் தொடர்புடையவை. போராட்டத்தின் போது சரீர அளவில் தைரியத்தைக் காட்டிய பலர் கொள்கையளவில் அதைரியத்துடன் செயலாற்றுகின்றனர். தைரியம் ஆத்மனின் அரிய பண்பாகும். அது உள்ளிருந்து வெளி வருகிறது.

15. பதவியும் பண்பும்

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு" - குறள்

I. சட்டத்துறை

வக்கீல் அல்லது அட்வகேட், ப்ளீடர் அல்லது சொலிசிடர் அல்லது பாரிஸ்டர் முதலியவர்களுக்கும் உத்தியோகத்துறையில் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுக்க முறைகள் உண்டு. அவர்கள் வெறும் வரும்படிக்காக தோற்றுப் போகக் கூடிய கேஸ்களையும் தான் வெற்றிகரமாக நடத்தித்தர முடியும் என ஏமாற்றி வாங்கக் கூடாது.

பொய்ச் சாட்சிகளை அவர்கள் தயாரிக்கக் கூடாது. பொய்ச் சாட்சிகளுக்குப் போதனை செய்வதே பெருங்குற்றம்; கொடிய பாபம். பொய்ச் சாட்சிகளைத் தயாரிக்கும் சட்ட நிபுணர் அல்லது வழக்கறிஞர் தனது மனச்சாட்சியையே கொல்ல முற்படுகிறார். மேலும் அவர் மற்றவர் களையும் கெடுக்க முனைகிறார்.

ஆத்மீகப் பாதையில் அவர் சிறிதளவும் முன்னேறுவது அசாத்தியம். உரிய வலுவுடன் அவரால் வாதாட முடியாது. ஏன்? அவரிடம் பொய்மை பதிந்திருக்கிறதே. பொய்மைக்கேது பலம். அவரால் கம்பீரமாக நிமிர்ந்து நிற்க முடியாது. ஏன், அவரது ஒழுக்க முதுகெலும்புதான் ஒடிந்துவிட்டதே. பற்பல விதங்களில் திரித்துக் கூறி வாதாடினாலும் கேஸில் வெற்றி கிடைக்கும் என அவரால் உறுதி கூற முடியாது. சத்யமேவ ஜயதே- உண்மையே உயர்வுறும்.

வக்கீல் ஒருவர் ஒரு கேஸை வாங்கினால் அவர் கட்சிக்காரர்களுக்காக ஆத்மார்த்தமாகப் பாடுபட வேண்டும். தனது பீஸ்வரத் தாமதிக்கிறதே என்ற எண்ணத்தினால் கேஸை நடத்துவதில் மெத்தனம் இருக்கக் கூடாது.

ஏழைகளிடமிருந்துள்ள கேஸ்களை அவர் இலவசமாக நடந்த முற்பட வேண்டும். பொது நன்மைக்காகப் பிரதிபலனை எதிர்ப்பார்க்காமல் அவர் உழைக்க வேண்டும். இதுவே அவரது கர்மயோகம். இது அவருடைய இதயத்தைத் தூய்மையாக்கும்.

தமது இறுதி நாட்களிலும் புலாபாய் தேசாய் மக்களுக்காக எங்ஙனம் அந்தரங்க சுத்தியுடன் தீவிரமாக உழைத்தார் என்பதை உன்னிப் பாருங்கள். இவ்வரிய சேவையால் அவர் பெற்ற புகழ் உலகமுள்ளவும் உயர்ந்து நிற்கும். பிரகிருதி உங்களுக்கு சட்ட அறிவைக் கொடுத்துள்ளது.

அதை நீங்கள் இயற்கையின் ஏழை, திக்கற்ற குழந்தைகளைக் காப்பாற்று வதில் பயன்படுத்த வேண்டும். ஒரு தடவை பண்டித மோதிலால் நேரு காங்கிரஸ்காரர்களிடம் இருந்தும் பீஸ் வாங்க எண்ணினார். மதிப்பிற்குரிய தந்தையே! யாருக்காக நீங்கள் பணத்தைக் குவித்து வைக்கிறீர்கள் என்று ஜவஹர்லால் தமது தந்தையிடம் கேட்டார்.

"எல்லாம் உனக்காகத்தான், நீ என் அருமைப் புதல்வன் அல்லவா?" என்றார் மோதிலால். அன்புத் தந்தையே! உமது வருமானத்திலிருந்து எனக்கு ஒரு பைசா கூட வேண்டியதில்லை. நான் சுதந்திரமாக என்னைக் காப்பாற்றிக் கொள்வேன். தயவு செய்து இந்த கேஸ்களைப் பீஸின்றி வாதாடுங்கள். இது பொதுச் சேவையாகும், என்று சுடச்சுடப் பதில் சொன்னார் ஜவஹர்லால்.

இவ்வரிய கூற்று மோதிலாலின் கண்களைத் திறந்தன. ''ஜவஹர் அவர்களை அழைத்து வா. நான் அவர்களை இரக்கமற்ற இதயத்துடன் அனுப்பிவிட்டேன். இந்தக் கேஸை பீஸின்றியே நான் எடுத்து வாதாடுவேன்'' என்றார் மோதிலால்.

ஜவஹர்லாலின் வார்த்தைகள் அவரது தந்தையின் வாழ்வையே மாற்றியமைத்தது. அவர் தமது சட்டத்துறை உத்தியோகத்தை உதறித்தள்ளி ஊக்கம் மிகும் காங்கிரஸ் தொண்டராக விளங்கலானார்.

நேரான பொய் அல்லது திரித்துக் கூறப்படும் பொய் சொல்லாமல் இந்த வேலையை எங்களால் செய்ய முடியாது. பொய் சாட்சியங்களைத் தயார் செய்யாத நிலையில் எங்களால் வெற்றி பெற முடியாது என்று வக்கீல்கள் கூறலாம். இது பெருந்தவறு. வேண்டுமென்றே உண்மையைப் பொய்யாக்கிப் பொய்யை மெய்யாக்கும் வக்கீல்கள் அனைவரும் கலிபுருடர்களின் தோழர்களேயாவர்.

தெய்வீகத்திற்குப் புறம்பான அந்தகார சக்திகளுடன் தோழமை பூண்டு நிற்கும் அவர்கள் சைத்தானின் கருவிகளாகக் காட்சியளிக்கின்றனர். மனச் சாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்துகொள்ளும் வக்கீல்களும் இருக்கின்றனர். அவர்கள் பலஹீனமான கேஸ்களை எடுக்க மாட்டார்கள்.

பொய்ச் சாட்சியங்களைத் தயார் செய்ய மாட்டார்கள். அத்தகைய வர்கள் நீதிஸ்தலத்தின் சிங்கங்களாக விளங்குகின்றனர். அவர்களுக்கு அபாரமாக தொழில் நடைபெறுகிறது. சத்தியமும் உண்மை உள்ளமும் பொருந்திய நேர்மையான வக்கீல்கள் என அவர்கள் அனைவராலும் புகழப்படுகின்றனர். அவர்களை நோக்கிக் கட்சிக்காரர்கள் ஓடோடியும் வந்து குவிகின்றனர்.

சத்தியவான்களே புகழுடன் பிரகாசித்து வாழ்க்கையில் வெற்றியடை கின்றனர். மகாத்மா காந்திஜியின் ''சத்திய சோதனை'' என்ற மகத்தான நூலைப் படியுங்கள். காந்திஜி தமது தொழிலில் எவ்வளவு தூரம் உண்மையைக் கடைப்பிடித்து நின்றார் என்பது உங்களுக்குத் தெரியவரும்.

உங்களின் சாதுர்யமான சட்ட புண்யத்தால் குற்றமற்ற அநேகம் மக்களை ஜெயிலுக்கும் தூக்குமேடைக்கும் நீங்கள் அனுப்பியிருக்கிறீர்கள். எத்தகைய பெருங்குற்றம். மன்னிக்க முடியாத பயங்கரச் செயல். இந்தப் பாபச் செயலுக்குரிய தண்டனையை நீங்கள் அனுபவித்தே ஆக வேண்டும். நல்ல பிறவி என்பது அநேக ஜன்மங்களுக்குக் கிடையாது. அடுத்த ஜன்மத்தில் நீங்கள் குணப்படுத்த முடியாத கொடும் பிணிகளால்

அவதிப்படுவீர்கள். உணர்ச்சியூட்டும் திருப்பதிக் கேஸைப்பற்றி நீங்கள் கேட்டதில்லையோ? பகவான் வெங்கடேசரே சாக்ஷியாக வந்தார். நீதிபதி தன் வேலையை உதறித் தள்ளி விட்டுத் துறவியானார்.

பணமல்ல உங்கள் லட்சியமாக இருக்க வேண்டுவது. அதனால் நித்தியானந்தத்தைத் தர முடியாது. பண்புடைய வாழ்வில் ஈடுபடுங்கள். உண்மையில் நில்லுங்கள். பொய்ச் சாட்சிகளைத் தயார் செய்யாதீர்கள். ஏழைகளுக்காக இலவச ரீதியில் வாதாடுங்கள்.

ஜபம், கீர்த்தனம், தியானத்தில் ஈடுபடுங்கள். நீங்களும் நித்தியானந்தத்தை அடையும் வாய்ப்பைப் பெறுவீர்கள். பொய்மை, ஏமாற்றம், குறும்புத்தனம் முதலியவற்றைக் கொண்டு நிற்கும் மனிதன் தன்னால் சமூகத்திற்கு எத்தகைய பெரும் தீங்கு ஏற்படுகிறது என்பதை உணர்கிறானில்லை.

உண்மையை நிலை நாட்டி நியாயத்தை அளிக்கவே சட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன. ஆனால் அந்தத் தொழிலிலுள்ள துர்நடத்தையானது, நியாயத்தையும் நேர்மையையும் வேருடன் பிடுங்கி எறிந்துவிட்டு, உண்மையை ஸ்தாபிக்க வேண்டிய அதே இடத்தில் பொய்மையைப் போற்றிப் புகழ்கிறது.

II. வைத்தியத்துறை

தன்னைச் சரண் அடைந்துள்ள நோயாளிகளின் ரகசியத்தை ஒரு டாக்டர் மற்றவர்களிடம் வெளிப்படுத்தக் கூடாது.

ஒரு நோயாளிக்குச் சிகிச்சை தொடங்கிய பிறகு முதல் நாள் அவன் வீட்டுக்குச் சென்றதற்கான விசிடிங் பீசை அவன் கொடுக்கவில்லை என்பதற்காக அவனுக்குச் சிகிச்சை செய்வதை மறுக்கக் கூடாது. குணப்படும் வரையிலும் அந்த நோயாளிக்குச் சிகிச்சை அளிக்க டாக்டர் கடமைப் பட்டிருக்கிறார். நோயாளி டாக்டருக்குரிய தொகையை சில நாட்கள் சென்று கொடுக்கலாம்.

தொழில்துறை ஒழுங்குமுறை எனும் பெயரால் அவசர கேஸ்களைப் பார்ப்பதற்கு டாக்டர் மறுப்பது முறையல்ல. மற்றொரு டாக்டரிடம் வைத்தியம் பார்த்தான் என்பதற்காக நோயாளியைக் காண டாக்டர் ஒருவர் மறுக்கவும் கூடாது.

ஹெர்னியா அல்லது குடலிறக்க ஆப்பரேஷனுக்காக ஒரு ரண வைத்தியர் ரூ.500/- பெற்றுக் கொள்கிறார். நோயாளி ஆப்பரேஷன் மேஜையில் கிடக்கிறான். அவன் வயிறு பிளக்கப்பட்டுள்ளது. எதிர்பாராத வேறு சில கோளாறுகளை வைத்தியர் பார்க்கிறார். மேலும் சில ஆப்பரேஷன்கள் செய்தாக வேண்டும் ரூ.500/- நீங்கள் கொடுத்தாக வேண்டும்.

இந்தக் கோளாரின் காரணமாக ஆப்பரேஷன் மிக்க கஷ்டமாக்கி விட்டது. இது அதிகப்படிவேலை. இல்லையேல் நான் இந்த ஆப்பரேஷனைச் செய்யப் போவதில்லை என்று வைத்தியர் நோயாளியின் தந்தையிடம் கூறினால் வைத்தியப் துறைப் பண்புக்கு எதிராக அவர் செல்வ தாகும். ஒருவனின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் அபாய கரமான நேரத்தில் லாபமடிக்க எண்ணுவது மனிதத் தன்மைக்கே முற்றிலும் மாறுபட்ட செயலாகும்.

ஆப்பரேஷனை வெற்றிக்ரமாக முடித்தபின் சிறிது நேரத்திற்குப் பிறகு கொடுக்கக் கூடிய நிலையில் நோயாளி இருந்தால், அவனிடமிருந்து மேலும் தொகை வேண்டுமெனப் பணிவுடன் கேட்டுக் பெற்றுக் கொள்வதில் கேடில்லை.

டாக்டரின் முதற்கடமை துன்பத்தைப் போக்குவதேயாகும். மிகக் குறைந்த கால அளவுக்குள் அவர் வியாதியைக் குணப்படுத்த முயற்சிக்க வேண்டும். அதிக நாள்கள் நீடித்தால் அதிகம் பணம் கிடைக்குமே என எண்ணி நோயாளியைக் குணப்படுத்துவதில் காலதாமதம் செய்வது கொடுங்குற்றமாகும். நோயாளியின் சிகிச்சையை விரைவிலேயே முடிக்க முயலுங்கள். சிகிச்சையே வெகு நாட்களுக்கு நீளச் செய்வது குற்றமாகும்.

ஏழை, அகதிகளன்ன பிணியாளர்களை வைத்துக் கொண்டு பரி சோதனையில் இறங்குவது பாபகரமானது. ஜீவன் புனிதமானது. உங்களையோ அல்லது உங்கள் நெருங்கிய உறவினரையோ ஏதாவதொரு கடுஞ்சித்தமுள்ள டாக்டர் பரிசோதனைகள் செய்ய முயன்றால் நீங்கள் எங்ஙனம் எண்ணுவீர்கள் என்பதைக் கருதிப்பாருங்கள்.

ஏதாவது கொள்ளைநோய் நாட்டில் மக்களை வாட்டிவரும் நேரத்தில், அந்த நோயைத் தடுத்து நிறுத்துவதில் டாக்டர்கள் முடிந்தவரையில் முயல வேண்டும். பற்பல முறைகளையும் எளிய வழிகளையும் மக்களுக்கு எடுத்துக்கூறி வியாதியைத் தடுக்க முற்பட வேண்டும். சுகாதாரம், பொதுநலம், சிசுக்கள் நலன், பிரசவத்திற்கு முன்னும் பின்னும் மாதர் நலன்

முதலியவற்றின் கருத்துக்களை படவிளக்கக் காட்சிகள், பொதுச் சொற்பொழிவுகள், வகுப்புகள் முதலியவற்றால் மக்களிடையே பரப்ப டாக்டர்கள் பெரும் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஏழை நோயாளிகள் தன்னை அண்டி வந்தால், அவர்களுக்கு இலவச மாகச் சிகிச்சை செய்ய அவர்கள் முன் வர வேண்டும். ஏழைகளுக்குத் தொண்டு செய்வதில் டாக்டர்கள் விசேஷப் பற்றுதல் கொண்டு விளங்க வேண்டும்.

வெறும் தண்ணீரை ஊசிமூலம் உட்புகுத்தி, விலையுயர்ந்த மருந்தையே உபயோகித்ததாக கூறிப் பெரும் தொகையைப் பறிக்க எண்ணுவது தகாத செயலாகும். இது உயரிய ஒழுக்கக் கேடாகும்.

நியாயமான பீஸைத்தான் டாக்டர்கள் வாங்க வேண்டும். லட்சாதிபதி ஆக வேண்டும் என்ற நோக்கத்துடன் டாக்டர்கள் விளங்கக் கூடாது. இரக்கமும் சகானுபூதியும் மிகுந்தவர் என்று மக்கள் போற்றும் நிலையை எய்துவதே அவர்கள் லட்சியமாக இருக்க வேண்டும். ஆத்மபாவத்துடன் கூடிய அந்தரங்க சேவையால் விரைவிலேயே உள்ளத்தை பரிசுத்தப்படுத்தி, ஆத்மானுபூதியைப் பெற அவர்கட்கு இதுவே சிறந்த தருணமாகும்.

தப்பிதமான கருத்துக்களைக் கூறி நோயாளியை டாக்டர் ஒருவர் பய முறுத்தக் கூடாது. ''இந்த வியாதி குணப்படுத்த முடியாதது. அய்யோ இது முற்றிய நிலையிலுள்ள க்ஷயரோகமாகும்!'' என்று கூறினால் நோயாளி எவ்வளவு அதிர்ச்சியடைவான் என்பதை எண்ணிப் பாருங்கள். தவறான முறையில் அமையும் டாக்டரின் கூற்றினால் நோயாளி அதிர்ச்சி காரணமாக இறந்துபடக்கூடும்.

எனவே டாக்டர்கள் நோயாளியிடம் இனிமையாகப் பேச வேண்டும். ஊக்குவிக்கும் வார்த்தைகளையே பேச வேண்டும். ''பயப்படாதீர், சகோதரரே! சில நாட்களிலே நீங்கள் குணமடைந்து விடுவீர்கள். விரைவிலேயே, நீங்கள் நல்லாரோக்கிய நிலையை அடைவீர்கள்'' என்று தைரியமூட்டும் வார்த்தைகளைப் பேசும் டாக்டர்களால்தான் துன்பமுறும் மனித சமுதாயத்திற்கு உண்மையில் நன்மை செய்ய முடியும்.

நோயாளியின் கஷ்டத்தைக் கண்டதும் ஒரு டாக்டரின் உள்ளமானது உருக வேண்டும். வீடு வீடாகச் சென்று அவர் ஏழைகளுக்கு இலவச வைத்திய உதவி அளிக்க வேண்டும். தனது வருவாயில் பத்தில் ஒரு பங்கை

ஏழைகளுக்கு இலவசமாக மருந்துகள் விநியோகிப்பதில் அவர் பயன்படுத்த வேண்டும். தான் பெற்ற அறிவு பெறும் செல்வத்தைச் சேகரிப்பதற்காக அல்ல, சமூகத்தில் சிறந்ததோர் சேவை செய்வதற்காகவே என்ற உண்மையைச் சதா தன் மனதில் கொண்டு விளங்க வேண்டும் நமது டாக்டர்கள்.

ஆதலால் தனது அன்றாடத் தொழிலைத்தவிர எங்கு மக்கள் துன்பப்படுகின்றனர், எங்கெல்லாம் தனது உதவி தேவையாக இருக்கிறது என்பதை டாக்டர்கள் சதா கவனித்து வர வேண்டும். மேஜை முன் நாற்காலியில் அமர்ந்து டெலிபோனில் ஏதாவது பெரிய பணக்காரர்கள் தன்னை வைத்தியத்திற்கு அழைக்கிறார்களா என்பதை எதிர் நோக்கிக் காத்திருப்பதுடன் ஒரு டாக்டரின் ஜோலி முடிந்துவிடுவதில்லை.

நாட்டிலுள்ள குழந்தைகள் எல்லோரையும் சுகாதார அறிவு பொருந்திய வர்களாக ஆக்கும் பெருந்தொண்டை டாக்டர்களால் செய்ய முடியும். தொடக்கத்திலிருந்தே நாட்டின் ஆரோக்கியம் பாதுகாக்கப்பட்டு, வளர்க்கப்பட வேண்டும். சாதாரண சுகாதார விஷயங்களைக் கூட குழந்தைகளுக்குப் புகட்டுவதில் பெற்றோர்கள் தோற்றுவிடுகின்றனர்.

ஒவ்வொரு குழந்தைக்கும் தனிமனிதனின் சுகாதார நியதிகளைக் குறித்துப் போதனை செய்வதை டாக்டர்கள் தங்களின் கடமையாகக் கருத வேண்டும். தன்னிடம் சிகிச்சை பெற வரும் நோயாளிடமிருந்து பணம் பறிப்பதையே நோக்கமாகக் கொண்டு மற்றவரின் கஷ்டங்களில் சிறிதளவும் இரக்கமின்றி, துன்பப்படுகிறவர்களிடம் கடுஞ்சித்தமுடையவராய், திக்கற்ற நிலையிலுள்ள நோயாளியின் அறியாமையைப் பயன்படுத்திப் பொருள் பெறத்துணியும் டாக்டர்கள் அனைவரும் மனித உருவிலுள்ள மிருகங்களே ஆவர்.

அவர்களை கொடுந் தண்டனை எதிர்நோக்கி நிற்கிறது. பிணியாளர் களுக்கு அவர்கள் இழைக்கும் துன்பமும் கஷ்டமும் நூறுமடங்கு அதிகரித்த ரீதியில் அவர்களையே வந்து தாக்கும் என்பது உறுதி.

அனைவரும் ஆண்டவனின் தோற்றமே என்றும், ஆண்டவனுக்கேதான் சேவை செய்வதாகவும் ஒவ்வொரு டாக்டரும் எண்ண வேண்டும். அங்ஙனம் உணர்ந்து செயலாற்றும் டாக்டர் தான் பூவுலகிலுள்ள கடவுள். அத்தகைய டாக்டர்கள் வாழ்க!

III. வியாபாரத் துறை

வியாபாரத்துறையிலும் ஒழுக்க முறைகள் உள்ளன. ஒரு வியாபாரியும் அரிய பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவரைப் பாபம் தாக்காது. அப்பொழுதுதான் அவர் வளம் பெற்று வாழ முடியும்.

செழுப்புறத் திகழ வேண்டுமானால் வியாபாரத் துறையில் பொய் சொல்லியே ஆகவேண்டும் என்று மக்கள் கூறுகின்றனர். இது பெரும் தவறு, உண்மை உள்ளத்துடன் வியாபாரம் செய்பவர்கள் புகழுடன் தோன்றுவது நிச்சயம். ஈடுபாடுகளில் நாணயமாக நடந்து கொள்ளும் நேர்மையான வியாபாரியையே மக்கள் நாடித் தேடிச் செல்கின்றனர்.

பொய்யானது முதலில் ஒரு துணி வியாபாரியின் கடையினுள் புகுந்தது. நீங்கள் ஒரு துணிக் கடைக்குள் சென்றால் கஜம் ஒன்றுக்கு ரூ. 8/- என்று வியாபாரி தெரிவிக்கிறான். பிறகு பேரம் பேசப்படுகிறது. முடிவில் அவன் கஜம் ரூ.1.50 ந.பை. வுக்கு வருகிறான். இத்தகைய வியாபாரம் தான் வியாபார விடுதிகள் பலவற்றிலும் நடைபெறுகிறது. ஏமாற்றமும் பொய்யும் வியாபாரியின்அடிப்படைக் கொள்கைகளாக அமைகின்றன.

அவனது மனச் சாட்சியானது பொய்யாலும் பேராசையாலும் மழுங்கிவிட்டது. அரிய பெரிய செல்வங்களைப் பெற்றிருந்தும் அவன் சங்கட நிலையிலேயே நிற்பதோடு ஒழுக்கத்தோடு பொருந்திய வாழ்க்கை வாழாததால் மறு உலகிலும் அவன் துன்பப்பட நேரிடும். அறிவு குழம்பியிருப்பதால் தான் இன்னது தான் செய்கிறோம் என்பதையும் அவன் அறிகிறதில்லை.

துர்நடத்தை என்பது விபசாரம். கற்பழித்தல் மட்டுமல்ல. பொய் சொல்லி மற்றவர்களை ஏமாற்றுகிறவனும் துர்நடத்தையில் ஈடுபடுகிறவனேயாவான். ஒரு சரக்கைத் தயாரிக்கிறவன் போலிச் சரக்கொன்றை விற்பனைக்கு வைக்கிறான். ஒருவன் கோதுமையில் மணலைக் கலக்கிறான். மற்றொருவன் நெய், மாவு, மற்றும் உணவுப் பொருள்களில் கலப்படம் செய்கிறான். ஆசாரி மோசமான மரத்தினால் செய்த சாமான்களுக்கு உயரிய மரத்தின் விலையை வாங்க முற்படுகிறான்.

கண்டிராக்டர் மூன்றாம் ரக செங்கற்களை உபயோகித்துவிட்டு முதல் ரகத்திற்குரிய தொகையைக் கேட்கிறான். இன்னும் இது போன்ற எண்ணற்ற நிகழ்ச்சிகள் எல்லாம் ஏமாற்றும் செயல்களேயாகும். வியாபாரத்தில் நிலவும் இந்தப் பளபளக்கும் செழிப்புத்தான் என்ன? சிறிது

இந்தப் பளபளக்கும் செழிப்புத்தான் என்ன? சிறிது ருசிகரமான உணவை உட்கொள்ளுவது, ஒரு மோட்டார் காரில் செல்வது, ஒரு முனிசிபல் கௌன்சிலர் ஆவது. இவைகளால் உங்களுக்கு நித்தியானத்தைத் தரமுடியாது. இதுவல்ல வாழ்க்கையின் லட்சியம். இது இன்பத்தைக் குறித்த மூடனின் எண்ணமாகும். சிறுபிள்ளைத்தனமல்லவா? இவையெல்லாம் அறிவில்லாக் குழந்தைகளின் விளையாட்டுப் பொம்மைகளாகும். உயரிய அறிவுடையவர்கள் இவற்றைக் கண்டு எள்ளி நகையாடுவர்.

உங்கள் வருவாயை நாணயமான முறையில் சம்பாதிக்க முயலுங்கள். பொய்யும் ஏமாற்றமும் குணப்படுத்தமுடியாத பிணிகளான கான்சர், க்ஷயம், வயிற்றுப்புண், இசைக்குழல்புண், செவிட்டுத்தன்மை, ஊமைத்தனம், குருட்டுத்தனம், இதய எரிச்சல், கால் எரிச்சல், நொண்டி முடமாதல் முதலியவற்றை உங்களுடைய மறுபிறவியில் ஏற்படுத்துகின்றன.

செயலும் விளைவும் இயற்கையின் இணையீடற்ற நியதியாகும். இந்தப் பிறவியில் நீங்கள் செய்யும் ஒவ்வொரு தவறுக்கும் அடுத்தபிறவியில் நீங்கள் கஷ்டப்பட்டாக வேண்டும். எனவே எண்ணம், சொல், செயலில் கவனமாக இருங்கள். நல்லவராக இருங்கள். நல்லதையே செய்யுங்கள். வினையும் விளைவும் என்ற நியதியைப் புரிந்து கொள்ளுங்கள்.

உங்களது வருவாயில் பத்தில் ஒரு பகுதியை ஈகையில் செலவிடுங்கள். தானதர்மம் பாபங்கள் எல்லாவற்றையும் போக்கிவிடும் இயல்புடையது. ஒழுங்குடன் தானதர்மம் செய்யுங்கள். நீங்கள் துன்பப்படும் காலங்களில் மட்டும் அபூர்வமாக ஏதோ சில ரூபாய்களை தர்மம் செய்தால் மட்டும் போதாது.

நியாயமான லாபம் பெறுங்கள். உங்கள் ஈடுபாடுகளில் உண்மையாக இருங்கள். மனச்சாட்சியை கொன்றோடுக்காதீர்கள். அதைச் சதா பரிசுத்தமாக வைத்திருங்கள். நிறைய தர்மம் செய்யுங்கள். வியாபாரத்தில் நீங்கள் வெற்றி பெறலாம்; செழிப்புடன் திகழலாம். வியாபாரம் உங்களைக் கெடுத்துவிடாது. லக்ஷ்மியின் திருவருள் உங்கள் மீது என்றும் நின்று நிலவும்.

ஒவ்வொரு பௌர்ணமி நாளிலும் சத்யநாராண கதை நடத்துங்கள், சமூக, சமய ஸ்தாபனங்களுக்கு உதவுங்கள். சமஸ்கிருதப் பள்ளிக்கூடங்கள், ஆயுர் வேத ஔடத சாலைகள், ஆஸ்பத்திரிகள், பெண்கள் பள்ளிக் கூடங்கள், இலவச ஆரம்பப் பள்ளிகள் முதலியன ஏற்படுத்துங்கள். கிராமங்களில் கிணறுகளை வெட்டுங்கள். சங்கீர்த்தன பவனங்களை

நிர்மாணியுங்கள். உங்களுக்குக் கிடைக்கும் லாபத்தை நல்ல வழிகளில் தர்மஸ்தாபனங்களுக்காகப் பயன்படுத்துங்கள். பேரும் புகழும் அடைவீர்கள். இங்கும் அடுத்த உலகிலும் ஆனந்தமாக வாழ்வீர்கள்.

நமது எண்ணங்களையும், செயல்களையும் உள்நின்று கடவுள் நோக்கி வருகிறார் என்ற உண்மையை சதா கருத்தில் கொண்டு, வினையும் விளைவும் என்ற நியதியைத் தெரிந்து, விளங்கினால் தவறான செய்கைகளில் நீங்கள் ஈடுபடமாட்டீர்கள்; தீய செயல்களைத் தவிர்த்துப் படிப்படியாகத் தீமைகளைக் குறைக்க முற்படுவீர்கள். வேதாந்த உண்மையான ஒருமைப் பாட்டை நீங்கள் உண்மையாகவே புரிந்து கொண்டால், மற்றவர்களை ஏமாற்ற எண்ணமாட்டீர்கள். மற்றவர் களை ஏமாற்றுவதில், நீங்கள் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறீர்கள். மற்றவர்களுக்கு உதவுவதில் தங்களுக்கே நீங்கள் உதவுகிறீர்கள். எல்லா ஜீவர்களிலும் ஒரே ஆத்மாதான் நின்று நிலவுகிறது. அதுவே உயரிய உண்மையாகும்.

IV. தொழிற்துறை

காலம் வெகுவாக மாறியுள்ளது. நூறு வருடங்களுக்கு முன்னால் இருந்ததைப் போல் அல்ல இன்றையச் சமூகம் அமைந்திருப்பது. முற்கால சமூக அமைப்பில் இல்லாத புதிய களங்களை மனித சமுதாயம் வளர்த்து உள்ளது. எல்லா தேசங்களும் தொழில் மயமாகி நிற்கின்றன. பெருமளவு தொழிற்சாலைகளும் தொழில் அமைப்புக்களும் எங்கும் காணக் கிடைக் கின்றன. இந்த விஷயங்கள் அனைத்தும் இவ்விசேஷ நிலைமைகளில் அமைந்துள்ள சூழ்நிலைகளுக்குப் பொருந்தக் கூடிய பிரத்யேக ஒழுக்க நியதிகளைத் தோன்றச் செய்கிறது. தொழில் முதலாளி ஒருவன் அதிகமான யந்திரமனமுடையவனாகி விடுகிறான்.

தன்னிடம் வேலை பார்க்கும் தொழிலாளர்ப் படைகளை அவன் தன்னைத் தானியங்கிகளாக மதிக்கிறான். தொழிலாளர்களிடம் கருணை தோன்று கிறதில்லை. இது தவறு. எப்படி தொழிலாளர்களின் உழைப் பானது முதலாளியின் செல்வத்தை ஆக்குகின்றதோ, அதே போல் முதலாளியின் ஒழுக்க முறைக்கடமை வேலையாட்களின் நலனைக் கவனிப்பதேயாகும். சாதாரணமாகப் பெருமளவு தொழில்களில் பெரும்பான்மைகளிலும் வறுமையின் இராச்சியத்திலிருந்துதான் தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு அவர்கள் உழைத்தாக வேண்டும். இந்தக் காரணத்தைப் பயன்படுத்தித் தொழிலாளர்களை முதலாளிகள் வருத்தக்கூடாது.

நியாயமானதும் தேவைக்குப் போதுமான அளவிலுமுள்ள கூலியை அளித்துதவுவதோடு நில்லாமல், ஸ்டிரைக்குகள், எதிர்ப்பு, ஊர்வலம் முதலியன நடத்துவதற்குத் தொழிலாளர்களை நிர்பந்திக்கும் பரிதாப நிலைய உண்டுபண்ணாமல் அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பது முதலாளிகளின் முதற்கடமையாகும்.

தொழிலாளர்களைக் கருணையின்றித் கொன்றொடுக்கிப் பொருளைச் சேர்ப்பது ஒழுக்க நியதிக்கு முற்றிலும் புறம்பானதோர் பெருந்தீச் செயலாகும். தொழில்துறை உறவுகள் அனைத்தும் ஒப்பந்த முறையை அடிப்படையாகக் கொண்டவை. தொழில் துறை எவ்வளவுதான் லௌகீகமாக இருந்தபோதிலும் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே யுள்ள உடன்படிக்கை எப்பொழுதும் ஒரு புனித விஷயமாகும்.

இந்த ஒப்பந்தத்தை அங்ஙனமே கருத வேண்டும். அப்பொழுதுதான் தர்மம் தழைத்தோங்கும். தொழிலாளியும் இவ்வொப்பந்தத்தை மதித்து நடப் பதற்குக் கடமைப்பட்டவன். மேலும் முதலாளியின் நலன்களுக்குத் தன்னா லானதைச் செய்யத் தொழிலாளியும் பாடுபட வேண்டும். இந்த உறவு பணத்தைக் கொடுப்பதும் பெறுவதும் என்ற விஷயத்தில் மட்டும் ஊன்றி நிற்பதல்ல.

பொறாமை, விஷமத்தனமான பகைமை, கழுத்தை நெரித்துத் தள்ளும் போட்டி மனப்பான்மை இவைகளை நவீன தொழில் துறையின் கொடிய நஞ்சுகளாக அமைகின்றன. இது அசுரத்தன்மை அல்லது ஒழுக்கக் கேடாகும். பெரும் தொழிலதிபர்கள் ஒன்று சேர்ந்து சிறு தொழில்களை கெடுத்து இல்லாதாக்க முனைவது ஒழுக்கத்திற்கு விரோதமாகும். கச்சாப் பொருள் கள் மக்களுக்கு மிகவும் தேவையாக இருக்கும் அவசரத்தில் அவைகளை வேண்டுமென்றே அழித்து போலி பற்றாக்குறை நெருக்கடி நிலையை உண்டு பண்ண முனைவது மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும்.

இத்தகைய அதர்மங்களைத் தூண்களாகக் கொண்டதனால் நாகரீகத்தை மோசமான பிரதிபலன்கள் தாக்கி நிற்கின்றன. பேராசையும் பொருளாசையும் சேர்ந்து தொழில் துறை ஒழுக்கக் கேட்டை உருவாக்குகின்றன. தீராத விருப்பமானது ஒருவனை தர்மத்தை அப்படியே புறக்கணிக்கச் செய்கிறது. உங்களை அது பழிக்கு அஞ்சாதவனாக்கு கிறது. எனவே பேராசையை ஒழித்துக்கட்டுங்கள். பொருளாசைகொண்டு அலையாதீர்கள். தொழிற்துறை நுண்ணறிவு ஸ்தாபனத்தை நடத்தும் ஆற்றல், பொருள் சக்தி அனைத்தும் மனித சமுதாய நலனை வளர்ப்பதற்குக் கடவுளால் உங்களிடம் அருளப்பட்டுள்ளன என்பதை அறியுங்கள்.

பதவியும் பண்பும்

நீங்கள் விசேஷத் தகுதியினுடையவும் செல்வத்தினுடையவும் பாதுகாப்பாளர்கள், எதற்காக? முதலில் அவற்றைப் பொதுஜன நன்மைக்காக உபயோகித்த பிறகு உங்கள் செல்வத்தைப் பெருக்குவதற்காக! இன்றையப் பெரும் தொழிலதிபர்கள் அதர்மத்தில் நிற்பதை விடுத்து மனித சமுதாயத்தின் நலனுக்கும், முன்னேற்றத்திற்கும், உதவி செய்பவர் களாக விளங்குவர்களாக. ஒழுக்க முறை நியதிகளின் மேல் நின்று உண்மை, ஆனந்தம், சாந்தி முதலியவற்றைப் பொருள் லாபத்துடன் பெறுவார்களாக!

இருபது முக்கிய ஆன்மீக போதனைகள்

1. தினமும் அதிகாலை 4 மணிக்கு எழுந்திருங்கள். ஜபம், தியானம் செய்யுங்கள்.
2. ஸாத்விக உணவையே உட்கொள்ளுங்கள். வயிற்றில் அளவுக்கு அதிகமாக அடைக்காதீர்கள்.
3. ஜபம், தியானத்திற்கு பத்மாஸனம் அல்லது ஸித்தாஸனத்தில் அமருங்கள்.
4. தியானத்திற்கென்று பூட்டு, சாவியுடன் தனியாக ஒரு அறையை வைத்திருங்கள்.
5. ரூபாய்க்குப் பத்து பைசா அல்லது உங்கள் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை தானமாகக் கொடுங்கள்.
6. பகவத்கீதையின் ஒரு அத்தியாயத்தை முறையாக தினமும் படியுங்கள்.
7. அடிப்படை உயிர் சக்தியைப் பாதுகாக்கவும், தனியாகவே உறங்குங்கள்.
8. புகை பிடித்தல், போதை தரும் பானங்கள் மற்றும் ராஜஸ உணவை விட்டு விடுங்கள்.
9. ஏகாதசி நாட்களில் உபவாசம் இருங்கள் அல்லது பால், பழம் மட்டும் அருந்துங்கள்.
10. தினமும் இரண்டு மணி நேரமும், சாப்பிடும் பொழுதும் மௌனத்தைக் கடைபிடியுங்கள்.
11. எந்த நிலையிலும் உண்மையையே பேசுங்கள். கொஞ்சமாகப் பேசுங்கள், இனிமையாகப் பேசங்கள்.
12. உங்களது தேவைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். திருப்தியான இன்ப வாழ்வு வாழுங்கள்.
13. ஒருபொழுதும் பிறரது உணர்ச்சிகளைப் புண்படுத்தாதீர்கள். அனைவரிடத்திதும் இரக்கம் காட்டுங்கள்.
14. நீங்கள் செய்த தவறுகளைக் குறித்து எண்ணிப் பாருங்கள். (சுயசோதனை)
15. வேலைக்காரர்களை அண்டி இருக்காதீர்கள்.
16. காலையில் கண் விழித்தவுடனும், இரவில் படுக்கச் செல்லும்போதும் கடவுளை நினையுங்கள்.
17. உங்கள் பையிலோ , கழுத்திலோ எப்பொழுதும் ஒரு ஜபமாலையை வைத்திருங்கள்.
18. எளிய வாழ்க்கை - உயரிய சிந்தனை என்ற இலட்சியதுடன் வாழுங்கள்.
19. ஸாதுக்கள், ஸன்யாஸிகள் மற்றும் நோயுற்றோருக்கு தொண்டு செய்யுங்கள்.
20. அன்றாட ஆன்மீக நாட்குறிப்பை வைத்திருங்கள். உங்களது செயல்முறையில் உறுதியாக இருங்கள்.

ஆத்மீக நாட்குறிப்பு (வாரத்திற்குரியது)

1. எத்தனை மணி நேரம் உறங்கினீர்கள்?
2. எப்பொழுது துயிலெழுந்தீர்கள்?
3. எத்தனை மாலைகள் ஜபம் செய்தீர்கள்?
4. எவ்வளவு நேரம் கீர்த்தனை செய்தீர்கள்?
5. எத்தனை பிராணாயாமங்கள் செய்தீர்கள்?
6. எவ்வளவு நேரம் ஆசனம் பழகினீர்கள்?
7. எவ்வளவு நேரம் ஒரே ஆசனத்தில் இருந்து தியானம் செய்தீர்கள்?
8. தியானத்தில் ஒழுங்காக இருந்தீர்களா?
9. கீதைச்சுலோகங்கள் எத்தனை மனப்பாடம் செய்தீர்கள்?
10. நல்லாரிணக்கத்தில் எவ்வளவு நேரம் இருந்தீர்கள்?
11. எவ்வளவு நேரம் மௌனம் அனுஷ்டித்தீர்கள்
12. தன்னலமற்ற தொண்டில் எவ்வளவு நேரத்தை பயன்படுத்தினீர்கள்?
13. தர்மமாக எவ்வளவு செலவு செய்தீர்கள்?
14. எத்தனை தடவை மந்திரம் எழுதினீர்கள்?
15. எவ்வளவு நேரம் உடற்பயிற்சி செய்தீர்கள்?
16. எத்தனை தடவை பொய் சொன்னீர்கள், அதற்களித்த தண்டனை என்ன?
17. எத்தனை தடவை கோபித்துக்கொண்டீர்கள்? எவ்வளவு நேரம் அது நின்றது? அதற்கு தானே அளித்துக்கொண்ட தண்டனை என்ன?
18. பயனற்ற தொடர்பில் எவ்வளவு நேரத்தை வீணாக்கினீர்கள்?
19. பிரம்மச்சரியத்திலிருந்து எத்தனை தடவை வழுவினீர்கள்?
20. மறைநூல்களை எவ்வளவு நேரம் படித்தீர்கள்?
21. தீய சுபாவங்களை அடக்குவதில் எத்தனை தடவை தோல்வி அடைந்தீர்கள்? அதற்கு தானே அளித்துக்கொண்ட தண்டனை என்ன?
22. உங்கள் இஷ்ட தெய்வத்தை எவ்வளவு நேரம் தியானித்தீர்கள்?
23. நீங்கள் வளர்க்க முயலும் நற்பண்புகள் எவை?
24. நீங்கள் தவிர்க்க முயலும் தீய பண்பு எது?
25. உங்களுக்கு எந்தப் புலன் அதிகத் தொல்லையைத் தருகிறது?
26. எத்தனை நாட்கள் நீங்கள் கண்விழிப்புடன் உபவாசமும் இருந்தீர்கள்?
27. எப்பொழுது உறங்கச் சென்றீர்கள்?

கையெழுத்து

இந்த நாட்குறிப்பைத் தயார் செய்வதில் பொய்க்கூற்றுக்களை எழுதுவது கூடாது. உங்கள் நன்மைக்காகவே நீங்கள் இதைத் தயார் செய்கிறீர்கள். குற்றங்களை சங்கோசமின்றி ஒப்புக் கொள்ளுங்கள். இந்த வார நாட்குறிப்பைச் சென்ற வாரக்குறிப்புடன் ஒப்பிட்டுப் பாருங்கள். இதனால் தன்னைத்தானே சீர்படுத்திக் கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும்.

ஸ்ரீ சுவாமி சிவானந்தர்

1887 செப்டம்பர் 8ம் நாள் தென் தமிழ் நாட்டில் தோன்றினார். டாக்டர் பட்டம் பெற்று தென் கிழக்காசியாவில் பணி யாற்றினார். 1923ல் அனைத்தையும் துறந்து துறவியானார்.

1924ல் ரிஷிகேசத்தை அடைந்து ஸ்ரீ சுவாமி விசுவானந்தரிடம் சந்நியாச தீக்ஷை பெற்றார். இமயமலைச் சாரலில் பல வருடங்கள் கடும்தவம் புரிந்து தன்னையறிந்த தனிப்பெரும் முனிவரானார்.

1936ல் தெய்வநெறிக் கழகத்தைத் தோற்றுவித்தார். உலகெங்கும் நூற்றுக் கணக்கான கிளைகளைப் பரப்பி நிற்கும் இந்தக் கழகம் ஜாதி, மத, நிற, இனம், மொழி வேற்றுமை யற்றதோர் ஒன்றுபட்ட சமுதாயத்தை தோற்று விக்கும் முயற்சியில் முனைந்துள்ளது.

ஸ்ரீ சுவாமிகளின் 300க்கும் மேற்பட்ட நூல்கள் எண்ணற்றவர்களை நல்வழிப்படுத்தியுள்ளன. இமய ஜோதியாகத் திகழ்ந்த ஸ்ரீ சுவாமிகள் 1963 ஜூலை 14 ஆம் நாள் இரவு இறையுடன் இரண்டறக் கலந்து "இதயஜோதி"யானார்.

அன்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

கோடானுகோடி மக்களின் வாழ்க்கையில் ஒளி விளக்கை ஏற்றி, நல்வாழ்க்கை வாழ்ந்து வரும் பலருக்கும் பேருத வியாக இருப்பது குருதேவர் சுவாமி சிவானந்தரின் நூல். இது போன்ற பல நூல்களை வெளியிட்டு மக்கட் சமுதாயம் மேன்மையுற தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

சிவானந்த தபோவனம்:

அலுவலகம் : 16, செம்பியன் கிணற்றுத் தெரு,
மதுரை – 625 001. போன் : 2624265, 2622840.



Parama Poojya
Swami Vimalanandaji,
Foundar,
Sivananda Tapovanam
with Swami Sivananda
Sundaranandaji,
President,
Sivananda Tapovanam,
Madurai.

